**மாற்றுவழி:**

- தலைமைச் செயற்பாட்டினை இரு மாணவர்களிடையே பகிர்ந்துகொள்ளலாம்.
- முடியுமாயின், ஒரு தடவையாவது எல்லா மாணவர்களும் உரையாடல் தலைமைத்துவத்தை வகிக்கும் வாய்ப்பினை வழங்கவேண்டும். இதற்குப் பல்வேறு உரையாடல்கள் வேண்டப்படலாம். உரையாடல் தலைமைத்துவ வகிபாகத்தினை 5-10 மணித்துளிகளின் பின் இன்னொரு மாணவருக்கு வழங்கலாம்.
- உரையாடல் தலைமைத்துவத்தை வகுப்புப் பேரவை முதலியவற்றிலும் நடைமுறைப்படுத்திப் பழகலாம்.

# 16 உரையாடலைத் திட்டமிடல்

**இலக்கு**

*திட்டமிடல் கலந்துரையாடலில், மாணவர்கள் தம் முதல் மொழியில் தம் சொல்லாடல் திறன்களையும் தமது கேட்டு விளங்கிக்கொள்ளலையும் பழகிக்கொள்வர். ஒரு கருத்திட்டத்துடன் அவர்களுடைய உடன்பாடுகள், பொறுப்பு தொடர்பான தெளிவான கட்டுப்பாடுகள், காலக்கெடுகள் முதலிய சமத்துவமான முறைகளில் கலந்துரையாடல் அவர்களுடைய தன்னாள்கையினையும் அதே நேரத்தில் சமூகத் தகைமையையும் வலுப்படுத்துகிறது.*

தரம் 4 - 6

30 - 45 மணித்துளிகள்



**குறிப்புகள்:**

இப் பயிற்சிக்கு முற்கட்டளையாவது மாணவர்கள் (குறைந்தது அவர்களுள் ஒரு குழுவாவது) ஒரு கருத்திட்டத்துக்கான நேரத்தையும் கருப்பொருளையும் உடையவர்களாயிருக்க வேண்டும். இது சிறிய கருத்திட்டங்களை (எ.கா. 3 - 4 பேர் கொண்ட குழுக்களாக பிறந்த நாட்டின் பல்வகைக் கூறுகள் பற்றிய சுவரொட்டிகளை ஆக்குதல்), இடைத்தர அளவுடைய கருத்திட்டங்கள் (வரலாறு அல்லது புவியியல் கருப்பொருள் பற்றிய ஓர் எடுத்துரைப்பினை ஆக்குதல் அல்லது கவிதை ஓதுதல் ஏற்பாடு செய்தல்) அல்லது பெரிய கருத்திட்டங்கள் (ஒரு நூல் பற்றி எண்ணமிடல் அல்லது பாரம்பரிய மொழியில் உரையுடனான ஓர் இறுவட்டு, ஒரு விழா அல்லது நாடகம், வேட்கையூட்டல் முதலியவற்றுடன் ஒரு பெற்றோர் மாலைநிகழ்வு ஏற்பாடு செய்தல்). முன்னரே தீர்மானிக்கப்பட்ட நேரம் பொருள் தொடர்பான சட்டகம் இன்றியமையாததாகும், இதனால் மாணவர்கள் கட்டற்ற முறையிலே பணியாற்றுவர்.

**நடைமுறை:**

- மாணவர்கள் திட்டத்தின் நோக்கத்தை முடிவுசெய்தல்: குழுவாகச் சேர்ந்து எதை அடையப்போகிறோம்?
- மாணவர்கள் கருத்துகளைச் சேர்க்கின்றனர்: எமது நோக்கினை எவ்வாறு உகந்த முறையில் அடையலாம்?
- கருத்துகள் குழுவாக அல்லது வகுப்பு முழுவதுமாக சேர்ந்து கலந்தாராயப்படும். எக்கருத்துகளையும் நோக்கங்களையும் நாம் அடையலாம்? யார் பங்களிப்பார்கள்?
- நிறைவாக, எழுத்தில் திட்டம் வரையப்படும்: யார், என்ன செய்கிறார், எப்படி, எப்போது, யாருடன்?

**குறிப்புகள்:**

- முதல் கலந்துரையாடல் ஆசிரியரால் வழிநடத்தப்படும். அதன்பின் கலந்துரையாடல் நடுவர் மற்றும் ஏனைய வகிபாகங்களை (எ.கா.: பதிவுச் செயற்பாடு) மாணவர்களே ஏற்கலாம் (மேலே பார்க்கவும் #14). வேண்டியபோது மட்டுமே ஆசிரியர் தலையிடுவார்.
- நடைமுறை, திறவுச் சொற்கள் (முதல்மொழியில்), ஏனைய ஒழுங்கமைப்புக்கான இன்றியமையாத குறிப்புகள் எழுத்தில் பட்டியலிடப்பட்டால், மாணவர்கள் நன்றாகக் கலந்துரையாடலிலும் பின்னர் தம் பணியிலும் தம்மைத் ஈடுபடுத்த வலுக்கொடுக்கும்.